# கவர்ச்சி விளம்பரங்கள்....நம்மை விழுங்கக் காத்திருக்கும் ஆபத்தை எப்போது உணர்வோம் ?

எஸ். சக்ரபாணி

(S. Chakrapani" <schakrapani04@hotmail.com)





நம்மை சுற்றி நம்மை அழிக்கக் காத்திருக்கும் ஆபத்தை அறிந்தால், நம்மை காப்பாற்றிக் கொள்ளலாமே!

ஒரு முறை இந்தியாவில் ஏன் நண்பர் ஒருவர் பத்திரிகையில் வந்த "மூட்டைப் பூச்சியை ஒழிக்க முடியவில்லையா? மூட்டைப் பூச்சியை ஒழிக்க இந்தியாவிலேயே முதல் முறையாக ஒரு அரிய சாதனம் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. ! நூறு சதவீதம் உத்தரவாதம்! சுற்றுச் சூழல் பாதிப்போ, பக்க விளைவுகளோ இல்லாதது ! உடனே அதைப் பெற ரூபாய் 200 மணி ஆர்டர் செய்யவும்," என்ற விளம்பரத்தைப் பார்த்து விட்டுப் பணம் அனுப்பினார். 15 நாட்கள் கழித்து பார்சல் வந்தது. உள்ளே வழ வழவென்று இரண்டு தேக்குக் கட்டைகள் இருந்தன. "மூட்டைப் பூச்சியைப் பிடித்து ஒரு கட்டையின் மேல் வைத்து இன்னொரு கட்டையால் அழுத்தவும்" என்று உபயோகிகும் முறை என்று அச்சடித்த சீட்டு அறிவுறுத்தியது! நீதி மன்றத்திற்குப் போனால் "அந்த நிறுவனம் பொய் சொல்லவில்லை. ஏமாற்றவில்லை, நம் நண்பர்தான் தீர விசாரிக்காமல் ஏமாந்து போயிருக்கிறார்" என்றார்கள்!

இது பல வருடங்களுக்கு முன் நடந்தது. அன்று இது மாதிரி ஓரிரண்டு விளம்பரங்கள்தான் இருந்தன. ஆனால் இன்று? உலகில் நம்மைக் கவர எதையெதையோ எழுதி விளம்பரம் செய்கிறார்கள். “பல் பொடியில் கால்ஷியம் இருப்பதால் பற்கள் உறுதிபடுமாம். குறிப்பிட்ட ஷாம்பு உபயோகித்தால் முடி நீளமாக வளருவது மட்டும் அல்ல உறுதியாகவும் இருக்குமாம். விளம்பரப்படுத்தும் குறிப்பிட்ட சோப்பினால் கருப்பாக உள்ள சருமம் கூட கிளியோபாட்ரா போல் அழகாக ஆகி விடுமாம். உலகமே உங்கள் காலடியில் வந்து விழுந்து விடுமாம்! இதற்கெல்லாம் காரணம் அவற்றை நம்பக் காத்திருக்கும் நாம்தான்.

நாமும் நல்ல நல்ல பள்ளிகளில் படித்தவரை கால் கட்டைவிரல் நகம் முதல் உச்சி தலை முடி வரை எல்லா உருப்புக்களின் வளர்ச்சியும், அவற்றின் வலிமை, பொலிவு எல்லாமே நாம் உண்ணும் உணவிலிருந்துதான் இயற்கையாகவே உருவாகின்றது. ஆனால் வியாபாரிகள் என்னவென்றால் இவர்கள் உடல் வளர்ச்சி குறித்த விஞ்ஞானத்தையே மாற்றி விடுவார்கள் போல் இருக்கிறது!

இவர்கள் தயாரிக்கும் சோப்பை உபயோகித்தால் உலகமே ஆரோக்கியமாகி விடுமாம்! (அப்புறம் உள்ளூர் மருத்துவர்களை எந்த வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டும்? ) ‘ப்ரண்ட் லோடிங்க் துணி துவைக்கும் மெஷினுக்கு ஒரு பவுடர், ‘டாப் லோடிங்க் துணி துவைக்கும் மெஷினுக்கு ஒரு பவுடர், கையால் துவைக்க ஒரு பவுடர், பிரஷ்ஷினால் துவைக்க ஒரு பவடர், என்று பல பல விளம்பரங்கள்! ஒரு வியாபார கேந்திரத்தின் டூத் பேஸ்டின் விசேஷ பார்முலா குழந்தைகள் பொய் பேசுவதைத் தடுக்கும் என்றும், இன்னொருவருடைய படைப்பு இருமல் மருந்து உங்களைக் கோபப்படாமல் தடுக்குமாம்! இவை எல்லாம் சாத்தியமா ?

முன் காலத்தில் லேக்டோஜன், செரிலேக், பேரெக்ஸ் என்று குழந்தைகளுக்கென்று சில உணவு வகைகள் வந்தன. பிறகு இவை எவ்வளவு மாதக் குழந்தைக்குப் பொருந்தும் என இன்னொரு விளம்பரம். சுரி, அதை நியாயம் என்று ஒத்துக் கொள்ளலாம். ஆனால் ஜுனியர் ஹார்லிக்ஸ், பள்ளி மாணவ மாணவியருக்கு, பெண்களுக்கு, கர்ப்பிணிகளுக்கு, மத்திய வயதினருக்கு, ஒவ்வொரு வயதினருக்கும் வெவ்வேறு ஹார்லிக்ஸ் என்று வியாபாரத் தந்திர விளம்பரங்களை

நியாயமானவை என்று கருதலாமா? அதாவது ஒவ்ஒரு வீட்டிலும் ஒரே பொருளை பத்து வகைக்கு வைத்திருக்க முடியுமா ? இதையெல்லாம் பார்க்கும் போது நம் இரத்தம் கொதிக்கிறது. ஆனால் நம்மால் என்ன செய்ய முடியும்? என்ன வேண்டுமானாலும் சொல்லி மக்களை மனதைக் குழப்பி பொய்யை நிஜம் போல நம்ப வைப்பதை சட்டம் கூட அனுமதிக்கின்றதே என்பதே நம் கவலை. **Let Buyer Beware** என்று மக்கள் புத்திசாலிகளாக இருந்தால் பிழைத்துக் கொள்ளட்டும் என்கிறது சட்டம்.

ஆதனால் என்னுடைய ஒரே வேண்டுகோள். விளம்பரங்களை முழுமையாக நம்பாதீர்கள்! இவை நமக்கு கேடுதான் விளைவிக்கும். இப்பொழுதெல்லாம் முன்னர் இந்திய கண்டத்தில் நம் முன்னோர்கள் உபயோகித்து வந்த இயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கும் சோப்பு, ஷாம்பு, முகப்பூச்சு சாதனங்களையே இன்று மேல் நாட்டு நாகரீக மனிதர்கள் விரும்பி உபயோகிக்கின்றனர். உள்ள சில இரசாயனப் பொருள்கள் சருமத்தில் உள்ள துவாரங்கள் மூலம் ஊடுருவி இரத்தத்தில கலக்கின்றன.

பல இரசாயனப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் சோப்பு, ஷாம்பு போன்றவற்றை உபயோகிப்பதினால் நரம்புக் கோளாறுகள், சரும நோய்கள், கேன்சர் போன்றவை வர வாய்ப்பு இருக்கிறது என்பதினால துபாய் நாட்டு அரசு அவற்றை உபயோகிக்க தடை விதித்தது. இயற்கையை அதன் போக்கில் விட்டு விடுங்கள். செயற்கை தலை முடி கருக்கும் சாயங்கள், உரங்கள், பூச்சி மருந்துகள், குளிர் பானங்கள், உணவுப் பொருள்கள் என்று அனைத்தையும் அளவில்லாமல் உபயோகிப்பதினால் ஏற்படும் பயங்கர பின் விளைவுகளை கண்கூடாகப் பார்கத பின்னும் ஏன் ஏமாறுகின்றீர்கள்?˙ நாகரீகம் என்ற பெயரால் நம் ஆரோக்கியத்தை நாமே கெடுத்துக் கொள்ள வேண்டுமா?
அது போல அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் அங்கு விலை போகாதவற்றை போன்றவை அதிக வளர்ச்சி அடையா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அங்கே விற்கிறார்கள்.

நூட்டில் அறிவு ஜீவுகள் உள்ளனர் என்பதற்கு உதாரணமாக, வோடஃபோன் விளம்பரம் ஒன்றில் ஒரு குழந்தை நாயின் நாக்கில் ஸ்டாம்பைத் தொட்டு ஒட்டுவது போலவும் அந்த நாய் வேனின் பின் ஓடுவது போலவும் காட்டியதை **SPCA** என்ற அமைப்பு “இது மிருகங்களைக் கேவலப் படுத்துகிறது” என்று எதிர்ப்புத் தெரிவிக்க விளம்பரம் வாபஸானது. அது

போல கேடு விளைவிக்கும், கலப்படம் செய்யப்பட்ட பொருள்களை உபயோகிப்பதின் மூலம் நாம் அழிவை நோக்கி அதிவேகமாய் போய்க் கொண்டிருக்கிறோம். நமக்காகப் பரிதாபப்பட எந்த அரசாங்கமும் இல்லை, அமைப்புகளும் இல்லை! எனவே நாம்தான் கவனமாக இருக்க வேண்டும்.

நம் முன்னோர் இந்த கார்னியர், லக்மே போன்ற அழகு சாதனங்களின் உதவியின்றி அழகாக இருந்தனர். அதையெல்லாம் மனதில் கொண்டு அனாவசியமான பொருள்களைத் தவிர்க்க முயலுங்கள். மூலிகைகள், தாவரப் பொருள்களிலிருந்து உற்பத்தி செய்யும் சில நிறுவனங்களின் பொருட்களை அடையாளம் கண்டு கொண்டு அவற்றை வாங்கி உபயோகியங்கள். மனதைக் கவரும் போலி விளம்பரங்களை நம்பாதீர்கள்!

1. http://antiagingchoices.com/harmful_ingredients/toxic_ingredients.htm